முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1330

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.05.2023, ஞாயிற்றுக்கிழமை

1. பரபிரம்ம ஆனந்த ஞான குருவே
 பாருலகம் காக்க அவதாரம் எடுத்த
 வரம்பெற்ற என் மாதவராஜனே
 வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
 அருளுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07 ம் நாள், 21.05.2023, ஞாயிற்றுக்கிழமை)

 வரமென இந்த கலியுகத்தைக் காக்கும்
 வல்லமையாக அரங்கன் நீ அவதரித்திருக்க
3. இருக்கவே உன் சக்திகொண்டு
 இவ்வுலகில் உயர்தொண்டர்களைப் படைத்து
 கருத்தாக வேலவன் யான்
 கலியுகத்தை மாற்றம் செய்வேன்
4. செய்வேன் உலகமெங்கும் அரங்கன் உன் தொண்டர்படை
 சிறப்பான சேவையாற்றும் வண்ணம்
 மறுப்பின்றி ஆங்காங்கே வரவேற்கும்
 மண்ணுலகே அரங்கன் மார்க்கம் சரி என
5. சரியென ஏற்று பின் தொடர்ந்து
 சன்மார்க்கத்தை ஒருபோதும் மறக்கா வண்ணம்
 தெரிவிப்பேன் ஞான வழிகளில் உலகோர் வந்து
 தேசிகன் உன்வழி அற்புதம் நிகழக்கூடும்
6. கூடவே உலகமாற்றம் நடக்கும் வண்ணம்
 குரு அரங்கன் உன்னை அவதாரத்தில்
 வேலவன் யான் நடத்தியிருக்க
 வெற்றி உண்டு அரங்கன் அவதாரத்துக்கு
7. அவதாரத்தின் வழி அறிவிப்பேன் தொண்டர்படைகள் எல்லாம்
 அளவில்லா பெருகி கலியுகத்தில் ஆளுமைகளும் அரங்கன் வழிக்குவந்து
 வந்துமே அற்புதம் நடக்கக்கூடும்
 வல்லமைபட வடிவேலன் இயக்கம் தனை

8. இயக்கம் தனை அரங்கன் வழி முழுமைபட
இதுகாலம் துவக்கி விட்டேன்
கலியுகத்தில் தயக்கமின்றி தொண்டர்கள் மேலும் இணைந்துஇணைந்து
தவராஜன் வழி வரவர மாற்றம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—